**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-11012026-11257

Volume: 11

Issue: 1

Month: July

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.04.2026

Accepted: 05.06.2026

Published: 01.07.2026

Citation:
Vijayalakshmi, N., & Maheswari, S. (2026). The Philosophy of Life in the Songs of Kannadasan. *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 76–83.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i1.11257

*Corresponding Author:
vijaya_res@maher.ac.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Philosophy of Life in the Songs of Kannadasan

**N. Vijayalakshmi**
*Full-Time Ph.D. Research Scholar, Department of Tamil*
*Meenakshi College of Arts and Science,*
*Meenakshi Academy of Higher Education and Research*
*Deemed to be University, K.K. Nagar, Chennai*
*https://orcid.org/0009-0002-9880-1350*

**S. Maheswari**
*Assistant Professor, Department of Tamil, Faculty of Humanities and Science*
*Meenakshi Academy of Higher Education and Research*
*K.K.Nagar, Chennai*
*https://orcid.org/0009-0005-2165-2280*

**Abstract**

*It is only when spiritual insight and experience function together in harmony that a work becomes great literature. Most creative works are structured in such a way that they seem to speak directly and establish a connection with the reader. In this sense, the works of Kannadasan belong to the realm of literature. His film songs are, for the most part, directly relatable to audiences ranging from the common man to the scholar. Since the poet's film songs express, through words, the emotional experiences of the human heart, they stand as an art form and thus possess genuine literary quality. The poet wishes to convey these very qualities through the tradition of Sangam literature. Furthermore, these works perform the function of creating a connection with the reader through thought, feeling, and experience. Only those works capable of offering simplicity, naturalness, moral values, pleasure, and joy can be regarded as truly great literary creations. In narrating and writing about the joys and sorrows of life as a story, Kannadasan may be said to have no equal but himself. It is the poet Kannadasan who, by stating life's events and truths exactly as they are, created a new chapter in literary history. This article examines how he has recorded human life as literature in his songs.*

***Keywords:*** *Life, Literature and Kannadasan, Human Desire, Life Experiences, Relationships, Friends, Rise and Fall.*

**References**

1. Kannadasan (Poet), Thirai Isai Paadalgal (Film Music Songs), Volume I, Vanathi Padhippagam, Chennai, Fifth Edition, 1992.
2. Kannadasan (Poet), Thirai Isai Paadalgal (Film Music Songs), Volume II, Vanathi Padhippagam, Chennai, Fourth Edition, 1988.
3. Kannadasan (Poet), Thirai Isai Paadalgal (Film Music Songs), Volume III, Vanathi Padhippagam, Chennai, Second Edition, 1992.
4. Kannadasan (Poet), Kannadasan Kavithaigal (Kannadasan's Poems), Volume IV, Vanathi Padhippagam, Chennai, Eleventh Edition, 1991.
5. Puliyur Kesigan (Ed.), Thirukkural Pudhiya Urai (Thirukkural - New Commentary), Poombugar Padhippagam, Chennai, Eighth Edition, 1993.

6. Editorial Committee, Neethikkalanjiyam (Treasury of Ethics), New Century Book House Private Limited, Chennai, Third Edition, 1989.
7. Ki. Venuga, Tamil Ilakkiyangalil Panpaattu Pathivugal (Cultural Records in Tamil Literature), Volume One, Senthamizh College, Madurai.
8. M. Jayaboss, Kaviyarasu Kannadasan Kavithaigalil Sangka Ilakkiya Selvaakku (The Influence of Sangam Literature in the Poems of Kaviyarasu Kannadasan), Kannadasan Padhippagam, Thiyagaraya Nagar, Chennai-600017, First Edition, April - 2009.
9. A. Dhakshinamurthy, Tamilar Nagarigamum Panpadum (Tamil Civilization and Culture), Aindhinai Padhippagam, West Anna Nagar, Chennai-600040, Reprint Edition, June - 2019.
10. Sa. Ve. Subramaniyan, Sangka Ilakkiyam, Moolam Muzhuvathum (Sangam Literature, Complete Original Text), Manivasagar Padhippagam, Parimunai, Chennai-800108.
11. Gna. Manickavasagar, Purananuru Moolamum Uraiyum (Purananuru - Original Text with Commentary), Uma Padhippagam, Mannadi, Chennai-600001, Fourth Edition, February - 2010.

# கண்ணதாசன் பாடல்களில் வாழ்வியல்

**ந. விஜயலட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) தமிழ்த்துறை
மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை

**செ. மகேஸ்வரி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை

**ஆய்வுச் சுருக்கம்**
*கண்ணதாசனின் படைப்புகள் இலக்கியம் சார்ந்தவை. பெரும்பாலும் திரைப்படங்கள் பாமரன் முதல் அறிஞர் வரை நேரடி தொடர்புடையனவாகும். கவிஞரின் திரையிசைப் பாடல்கள் சொற்கள் மூலம் மனித உள்ளத்தின் உணர்வு அனுபவங்களை வெளிப்படுத்தும் கலையாகத் திகழ்வதால் இலக்கியத் தரம் வாய்ந்தவையே. கண்ணதாசன் கருத்தை, உணர்வை, அனுபவத்தைப் படிப்போருக்கு ஓருவகைத் தொடர்பினை உண்டாக்கும் பணியைப் படைப்புகள் செய்கின்றன. எளிமையும், இயல்பும், அறநெறியும், இன்பமும், மகிழ்ச்சியும் தரவல்ல படைப்புகளையே சிறந்த இலக்கியப் படைப்புகளாகக் கொள்ள முடியும். வாழ்க்கை நிகழ்வுகளையும், உண்மைகளையும் உள்ளதை உள்ளவாறு சொல்லி இலக்கியத்தில் புதிய வரலாற்றை ஏற்படுத்திய கவிஞர் கண்ணதாசன் வாழ்வியலை இலக்கியமாகத் தனது பாடல்களில் பதிவு செய்திருப்பதை இக்கட்டுரை ஆராய்ந்துரைக்கிறது.*
***திறவுச் சொற்கள்:*** *வாழ்க்கை, இலக்கியமும் கண்ணதாசனும், மனிதனுடைய ஆசை, வாழ்க்கை அனுபவங்கள், உறவு நிலை, நண்பர்கள், கவிதை, திரை இசைப்பாடல்கள், திறனாய்வு.*

## முன்னுரை

கவிஞர் கண்ணதாசனின் படைப்புகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்த இடத்தைப் பெற்றுள்ளன எனலாம். வாழ்வியல் என்பது வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியும், இன்பத் துன்பங்களைப் பற்றியும் எடுத்துரைப்பதாகும். கவிஞர் கண்ணதாசன் தனது திரை இசைப் பாடல்களிலும், கவிதைகளிலும் வாழ்வியலை எழுதியுள்ளார். அந்தவகையில் சங்க இலக்கியத்திற்குப் புத்துயிர் அளிக்கும் வண்ணம் கவிஞரின் கவிதைகளில் மிளிரும் சங்க இலக்கியக் கருத்துகள் இக்காலத்திற்கும் பொருந்துவதாகக் காண முடிகிறது. கண்ணதாசனின் பாடல்களில் காணப்படும் இலக்கியச் சிறப்புக்களை இக்கட்டுரை விவரிக்கிறது.

## இலக்கியமும் கண்ணதாசனும்

மக்கள் பெரும்பாலும் சங்க இலக்கியம் முதல் சிற்றிலக்கியங்கள் வரை அறியாதவர்கள். அவற்றை கவிஞர்கள் இலக்கிய நயத்தோடு பாடல்களைப் புனைந்துள்ளனர். கண்ணதாசனின் பாடல்கள் தெளிவாகவும், எளிதில் அனைவரும் புரிந்துகொள்ளும் வண்ணம் தமிழ்ச் சொற்களில் திரையிசைப் பாடல்களை

இலக்கிய நயத்தோடு புனைந்திருக்கிறார் கவிஞர்.

***யாயும் ஞாயும் யார் ஆகியரோ***
***எந்தையும் நுந்தையும் எம் முறைக்***
***கேளிர் யானும் நீயும் எவ்வழி அறிதும்,***
***செம்புலப் பெயல் நீர் போல,***
***அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே***
***(குறுந்:40)***

என்ற குறுந்தொகைப் பாடலை அறியாதவர் பலரும் உண்டு. ஆனால் கண்ணதாசனின் திரையிசைப்பாடலுக்குள் அந்த வரிகள் அனைத்தும் பாடல் வரிகளாக மாறின.

***"நேற்று வரை நீ யாரோ நான் யாரோ***
***இன்று முதல் நீ வேறோ நான் வேறோ***
***காணும் வரை நீ எங்கே நான் எங்கே***
***கண்டவுடன் நீ இங்கே நான் அங்கே"***

'வாழ்க்கைப் படகு' திரைப்படத்தில், இருவரும்சந்திக்கும்வரைகாதல்பிறக்கவில்லை சந்தித்த பிறகு இருவரும் இருவராக இல்லை ஒருவராயினர் என குறுந்தொகைப் பாடல் போலவே திரையிசைப் பாடலில் எழுதியிருப்பதை அறிய முடிகிறது.

**வாழ்க்கை**

தனி மனிதனுக்குத் தேவையானது சமுதாயமாகும். சமுதாயத்தின் வாழ்வாதாரமும், தனிக் குடும்பத்தின் வாழ்வாதாரமும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும்போது தன்னுலகத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நல வாழ்க்கையைப் பேண வேண்டியவனாகிறான். எனவே மனிதன் கவலையற்று வாழ வேண்டுமானால் மனைவி மாண்புடையவளாகவும், மக்கள் அறிவு நிரம்பியவளாகவும், இருப்பதற்கு அரசு ஒரு காரணமாகவும் அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டும் புறநானூற்றுப் பாடல் பின்வருமாறு;,

***மாண்ட என் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்;***
***யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்***
***அல்லவை செய்யான், காக்கும்; அதன்தலை***
***(புறம்: 191)***

பிசிராந்தையார் கூற்றுப்படி, வாழ்க்கையானது சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் வாழ்ந்தால்தான், மனிதன் மூப்பில்லாத வாழ்வினை நல்வாழ்வுடன் வாழ முடியும் என்பதை நம்மால் அறிய முடிகிறது. இதையே, கண்ணதாசன்,

***எங்கே வாழ்க்கை தொடங்கும்***
***அது எங்கே எவ்விதம் முடியும்***
***இதுதான் பாதை இதுதான் பயணம்***
***என்பது யாருக்கும் தெரியாது***
***(தி.இ.பா.தொ.2,ப.331)***

எனும் திரையிசைப் பாடலில், பொதுவாக மனிதர்களுடைய வாழ்க்கைப் பாதை தொடக்கம் என்பது முடிவு தெரியாத சிக்கல் போன்றதாகும் என்கிறார். இந்தப் பாதையில், இந்தப் பயணத்தில் முடிவும் போக்கும் யாராலும் புரிந்துகொள்ள முடியாதது என்று விளக்கமாகக் கூறியிருப்பதை அறியமுடிகிறது.

மனிதனுடைய வாழ்க்கை என்பது கடல் அலையைப்போல நிலையற்றது. மனிதர்களாகிய நாம் அதன்மேல் பயணம் செய்யும் படகு போன்றவர்கள் ஆவர்.

***ஆசையே அலைபோலே***
***நாமெல்லாம் அதன்மேலே***
***ஓடம் போலே ஆடிடுவோமே***
***வாழ்நாளிலே***
***(தி.இ.பா.தொ.2,ப.306)***

என்று 'தை பிறந்தால் வழி பிறக்கும்' திரைப்படப் பாடலில் மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றியும், நிலையாமைப் பற்றியும் கண்ணதாசன் எழுதியுள்ளார்.

**பணமும் கவலையும்**

மனிதனுடைய வாழ்க்கையில் பணமே எல்லாக் கவலைகளுக்கும் காரணமாகி விடுகிறது. வரவு வரும் வேளையில் கண் மூடித்தனமாகச் செலவு செய்வதும், செலவழிந்த பின்பு புத்தி தெளிவதும் இயற்கையாகும். இதனை,

**அளவறிந்து வாழாதவன் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக்கெடும்**
**(குறள்-479)**

எனும் குறளில் வள்ளுவர் கூறுகையில், தன்னுடைய செல்வத்தின் அளவை அறிந்து அதற்கு ஏற்றபடி வாழாதவனுடைய வாழ்க்கை உள்ளது போலத் தோன்றினாலும் இல்லாததாய்க் கெடும் என்று கூறுகிறார். இதனைக் கண்ணதாசனும் திரையிசைப் பாடலில்

**வரவு எட்டணா, செலவு பத்தணா**
**அதிகம் ரெண்டணா, கடைசியில் துந்தனா**
**(தி.இ.பா.தொ.1,ப.374)**

என்று 'பாமா விஜயம்' என்ற திரைப் படத்தில் பாடியுள்ளார் மனிதனுடைய வாழ்க்கையில் சிக்கனமில்லாமல், வரவுக்கு மேல் செலவு செய்தால் நிம்மதி இல்லாமல் அலைய வேண்டிவரும் எனக் குறிப்பிடுகிறார். வள்ளுவரும் மனிதனுடைய வாழ்க்கையில் பணம் இல்லையெனில்,

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை**
**பொருளில்லார்க்கு**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு**
**(குறள் -247)**

பணம் இல்லாதவன் இவ்வுலகில் இன்பமான வாழ்க்கையை வாழமுடியாது என கூறியுள்ளார்.

**"பணம் இல்லாதவன் பிணம்"**

என்று சொல்கிறது இந்தச் சமூகம்,

**ஈட்டி எட்டின மட்டுமே பாயும்!**
**பணமோ பாதாளம் வரைக்கும் பாயும்**

என்னும் முதுமொழிகள் பணத்தின் வலிமையைப் பேசுகின்றன.

இன்று மனிதனுடைய வாழ்க்கையில் பணம் இருந்தால் தானே உயர்வும், உறவும் வருகிறது. தாயும் பிள்ளையும் ஆனாலும் பணம் இல்லாவிட்டால் வாயும் வயிறும் தனித்தனிதான், பணத்திற்குப்பின்தான் அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, கணவன், மனைவி, உறவு எல்லாம் என்கிற உண்மை கருத்துகளைக் கண்ணதாசன் தம் கவிதை திறத்தில் வெளிப்படுத்திருப்பதை இங்குக் காணலாம்.

**அண்ணன் என்னடா தம்பி என்னடா**
**அவசரமான உலகத்திலே**
**ஆசைக் கொள்வதில் அர்த்தம் என்னடா**
**காசில்லாதவன் குடும்பத்திலே!**
**தாயும் பிள்ளையும் ஆன போதிலும்**
**வாயும் வயிறும் வேறடா**
**சந்தைக் கூட்டத்தில் வந்த**
**மந்தையில் சொந்தம்மென்பதும் ஏதடா?**

'பழநி' திரைப்படத்தில் பாடி, மனிதனுடைய வாழ்க்கையில் பணத்தின் போலித்தன்மையையும் பணம் படுத்தும் பாட்டையும் செல்வ செழிப்பின் சேர்க்கையைப் பற்றியும், வாழ்க்கையில் அண்ணன் தம்பி உறவு நிலைகுறித்தும் கூறியிருப்பதை அறியமுடிகிறது.

**வாழ்க்கை அனுபவங்கள்**

பொது வாழ்விலும், கலை, இலக்கியம், குடும்ப வாழ்வு போன்றவற்றிலும் கண்ணதாசனுக்கு அடுத்தடுத்து ஏற்பட்ட இன்ப துன்பங்களும் ஏற்ற இறக்கங்களும் இவருக்குப் பலவற்றின் வெளிப்பாடு அனுபவங்களை ஏற்படுத்தித் தந்துள்ளது. அவையே கவிதைகளாகவும், திரையிசைப் பாடலாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

**ஆர்வத்திற் சேர்த்ததோ அனுபவம் ஈந்ததோ**
**அறிவினுக் கில்லை பஞ்சம்**
**அமைதியில்லாதவன் துயில் கொண்டு தேறவே**
**ஆண்டவன் விரித்த மஞ்சம்**
**விரிக்கின்ற கவியன்றி வேறொன்று மில்லையே**
**(க.க.தொ.ஐங,ப.)[7]**

ஒரு மனிதனுடைய ஆர்வமும், அனுபவமும் அவனுடைய அறிவு சுயமாக ஏற்படாமல் வாழ்க்கை அனுபவத்தால் ஏற்பட்டதேயாகும். அந்த அனுபவத்தை கூறுவதினால் மனிதனுடைய வாழ்க்கையில் மன அமைதியைப்பெறலாம்.

**உறவு நிலை**

மனிதனுடைய வாழ்க்கையில் உயர் நிலையில் வாழும்போது உறவு வந்து சேர்வதும் தாழும்போது சொல்லாமல் ஓடி

மறைந்து விடுவதும் மனிதர்களின் இயல்பு. இந்தக் கருத்து, தனது வாழ்வில் நிகழ்ந்ததைக் கண்ணதாசன் அற்புதமாகப் பதிவுசெய்துள்ளார்.

**வாழும் நாளிலே கூட்டம் கூட்டமாய்**
**வந்து சேர்கிறார் பாரடா - கை**
**வறண்ட வீட்டிலே உடைந்த பானையை**
**மதித்து வந்தவர் யாரடா**
**பணத்தின் மீதுதான் பக்தி என்றான்**
**பந்தபாசமே ஏனடா**

**(தி.இ.பா.தொ.2, ப.335)**

என்ற பாடலின் மூலம் நல்ல நிலையில் வாழும்போது வரும் உறவு, நிலைதாழ்ந்த போது பிரிந்து போகும் என்ற கருத்து அவருடைய அனுபவத்தினால் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம். உறவினர்கள், செல்வம் உற்றவர் வீட்டிற்கே வருவார்கள். கூடவே கலகமும் பிறக்கும்; வீட்டின் ஒற்றுமை குலையும்; பிரிவு ஏற்படும் என்ற கருத்தை,

**உள்ளவர் வீட்டினுக்கே உறவு வரும் - அந்த**
**உறவு வந்தால் வீட்டில் பிரிவு வரும்**
**பிரிந்திருந்தால் நெஞ்சில் ஏக்கம் வரும் - அதன்**
**பின்பு வரும் பாசம் என்றும் வரும்**

**(தி.இ.பா.தொ.2, ப.316)**

என்ற பாடல் உறவினருடைய மனநிலை பற்றி துல்லியமாக மதிப்பீடு வெளிப்பட்டுள்ளது.

தனிப்பட்ட வாழ்விலும் பொதுவாழ்விலும் மனிதன் பல்வேறு வகையான குணங்களைக் கொண்டவனாக வாழ்கிறான். அத்தகைய குணங்களைக் கவிஞர் படம்பிடித்துக் காட்டுகிறார். மனித மனம் ஒவ்வொன்றிற்கும் ஒரு குணமிருக்கும். அவை நெருப்பு, சிரிப்பு, பகை, உறவு என்ற நான்கும் மனிதனுடைய வாழ்வில் இருக்கக்கூடிய ஒன்றாகும்.

**தொட்டால் சுடுவது நெருப்பாகும்**
**தொடாமல் சுடுவது சிரிப்பாகும்**
**தெரிந்தே கெடுப்பது பகையாகும்**
**தெரியாமல் கெடுப்பது உறவாகும்**

**(தி.இ.பா.தொ.2,ப.322)**

என்ற பாடலின் மூலம் தொட்டால் நெருப்பு சுடும் என்றும், ஆனால் நமது துன்ப நேரத்தில் சிலரது போலியான சிரிப்பு தொடாமலேயே தூரத்திலிருந்தே மனதை நெருப்புப் போலச் சுட்டுவிடும் என்றும், துன்பம் செய்வது வெளிப்படையாகவே தெரிந்து கெடுதல் செய்வது பகைவர்கள் என்றும் தெரியாமலேயே கெடுதலை வாழ்க்கையில் விளைவிப்பவர் உறவினர்கள் என்றும் கூறியிருப்பதை அறியலாம்.

**நண்பர்கள்**

மனித வாழ்வில் உறவுகளுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுவது நட்பு ஒன்றுதான். நிலம், நீர் (கடல்), ஆகாயம் ஆகியவற்றிற்கு ஒப்பீடாக நட்பு போற்றப் படுகிறது. உயர்ந்த நண்பர்கள் ஆழமான நட்பு கொண்டவர்களாக இருப்பர். அன்புடையவர்களாகவும் இருப்பர். ஆனால் சமயம் வந்தால் பிரிந்து போகக் கூடியவர்களாக இல்லாமல், எல்லா சமயத்திலும் உதவுபவர் நல்ல நண்பர் என்பதைத் திருவள்ளுவர்,

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

**(குறள் -788)**

என்கிறார் அவர், நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத்துடித்தும் துரிதமாகவும் செய்வதே நட்புக்கு இலக்கணமாக வகுத்துள்ளார். அதுபோலவே,

**நூறாண்டு பழகினும் மூத்தவர் கேண்மை**
**நீர்க்குள் பாசிபோல வேர்க் கொள்ளாதே**
**ஒருநாள் பழகினும், பெரியோர் கேண்மை**
**இருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே**

என்று அதிவீரராம பாண்டியர் நண்பர்களைப் பற்றி உயர்நிலையில் கூறியுள்ளார்.

பொதுவாக, மனித வாழ்க்கையில் நல்ல நண்பர்கள் பெற்றிருப்பது நற்பேறு. நல்லவர்கள் தன்னைக் காட்டிக்கொள்ள துன்பம் வரும்போதுதான், தானாக உதவ முன்வருவார்கள் என்பதைக் கண்ணதாசன் கூறுகின்றார்,

**நல்லவர் சிலநாள் மறைந்திருப்பார்**
**நாள்வரும் போதே வெளிவருவார்**

***வருவார் என்பதை நான் அறிவேன்***
***வருகின்ற நாளை யார் அறிவார்***
***(தி.இ.பா.தொ1,ப.110)***

என்ற கவிஞரின் பாடலில் நல்ல நண்பர்கள் என்பவர் தன்னை மறைத்து வாழ்வார்கள். துன்பவேளையில் தாமாக உதவ முன்வருவார்கள். அப்படி வரக்கூடியவர்களை நானறிவேன். ஆனால் வருகின்ற நாளை யார் அறிவார்கள் எனக் கூறியிருப்பது நண்பர்களின் உயர்வைப் போற்றுவதாக அமைந்துள்ளது.

மனிதனுடைய வாழ்வில் பலநிலைகளிலும் தீயவர்களைச் சந்திக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. பழகிய பின்னர்தான் தெரிகிறது, பழகுவதற்கு முன்பு தெரிவது கிடையாது என்பதை,

***அழகைக் காட்டும் கண்ணாடி***
***மனதைக் காட்டக் கூடாதோ***
***பழகும் போதே நன்மை தீமை***
***பார்த்துச் சொல்லக் கூடாதோ***
***(தி.இ.பா.தொ.ஐங,ப.299)***

என்ற பாடலில் கண்ணதாசன் தன்னைப் பிரதிபலிப்பதாகக் காட்டக் கூடிய ஒரு கண்ணாடி போன்ற கருவி இருக்குமானால் நலமாயிருக்குமே, பழகும் போதோ அல்லது பார்க்கும்போதோ நல்லவர்களையும் தீயவர்களையும் நாம் அறிந்து கொண்டு பழகினால் துன்பம் இல்லாமல் வாழலாமே என்று தனது நண்பர்கள் மூலமாக ஏற்பட்ட மனமுறிவினை வெளிப்படுத்தியுள்ளார்.

வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் தத்துவத் தேரோட்டிய வித்தகக் கவிஞர். கண்ணதாசனின் திரையிசைப் பாடல்கள் காலங்கள் கடந்தும் மக்கள் மனங்களிலும் நீங்கா இடம் பெற்றுள்ளன என்பதை உறுதிபடக் கூறலாம்.

## முடிவுரை

மனம் அமைதியை நோக்கிய பயணத்தில் கண்ணதாசன் தம்மைப் போலவே மக்களை இருக்க திரைஇசைப் பாடல்களில் சங்க இலக்கியப் பாடல்களைப் பயன்படுத்திருப்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது. மேலும் தனது வாழ்வின் ஏற்றத்திற்கு உதவியவர்களையும் குறித்துப் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

வாழ்க்கை என்றால் இன்பமும் துன்பமும், ஏற்றஇறக்கமும் இயல்பாகவே அமைந்துள்ளது என்றும், அவற்றை எதிர்கொண்டு வாழ்வதே மனித வாழ்வின் சிறப்பு என்றும் எழுதியுள்ளார்.

உறவினர்களின் எதிர்பார்ப்புகளையும், நண்பர்களின் உதவிகளையும் தமது பாடல்களில் பதிவு செய்து, உயர்ந்த நட்பிற்கும் அன்பிற்கும் வடிவம் கொடுத்திருக்கிறார்.

வாழ்வின் பயணங்களில் வறுமையும் துன்பமும் குடிகொண்டிருக்கும் நிலையில் பிறக்கும் தத்துவச் சிந்தனைகளில் கண்ணதாசன் ஒரு பாடமாகக் காட்சி தருகிறார். காதல் அன்பின் உயர்வுக்கும் சங்கப் பாடல்களில் வரும் அகப் பாடல்கள் தியைிசைப் பாடல்களுக்குச் சான்றுகளாகப் பரிணமிக்கின்றன. கண்ணதாசனின் கவித்துவச்சிந்தனைகள் வாழ்வியல் சிந்தனைகளாக திரையிசைப் பாடல்களில் பெரும்பங்கு வகித்துள்ளன என்பது கண்ணதாசனின் கவித்துவ ஆளுமைக்குச் சான்று.

## துணைநூற் பட்டியல்

1. கண்ணதாசன் திரைஇசைப் பாடல்கள் தொகுதி I, வானதி பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு 1992.
2. கண்ணதாசன் திரைஇசைப் பாடல்கள் தொகுதிII, வானதிபதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு 1988.
3. கண்ணதாசன் திரை இசைப் பாடல்கள் தொகுதி III, வானதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு 1992.
4. கண்ணதாசன் கவிதைகள் தொகுதி IV, வானதி பதிப்பகம், சென்னை, பதினொன்றாம் பதிப்பு 1991.
5. புலியூர்க்கேசிகன் (ப-ஆ) திருக்குறள் புதிய உரை. பூம்புகார் பதிப்பகம், சென்னை, எட்டாம் பதிப்பு 1993.
6. பதிப்பாசிரியர் குழு நீதிக்களஞ்சியம்,

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, மூன்றாம் பதிப்பு 1989.

7. கி.வேணுகா, தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டு பதிவுகள், தொகுதி ஒன்னு, செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

8. எம்.ஜெயபோஸ், கவியரசு கண்ணதாசன் கவிதைகளில் சங்க இலக்கியச் செல்வாக்கு, கண்ணதாசன் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2009.

9. அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணை பதிப்பகம், சென்னை, மறு பதிப்பு, ஜூன்- 2019.

10. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம், மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

11. ஞா. மாணிக்கவாசகர், புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை, நான்காம் பதிப்பு, 2010.